tanks, pipe lines, extensions and ground level reservoirs of Nagercoil. Thackalay and Kuzhithurai subdivisions. It is reported that no major irregularities were noticed by the Superintending Engineer (Highways and Rural Works) both during inspection and perusal of records.

அமெரிக்காவிலிருந்து கோதுமை அன்பளிப்பு

* 366 வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் சர்வோதய இயக்கத்தினருக்கு அமெரிக்காவிலிருந்து கோதுமை நன்கொடையாகத் தரப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், அக்கோதுமை எந்த அடிப்படையில் விநியோகிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இனம், சமயம், வகுப்பு என்ற வேறுபாடு கருதாமல் ஏழைகளுக்கும் தேவையுள்ளோர்க்கும் சர்வோதய இயக்கத்தினரால் கோதுமை விநியோகிக்கப்படுகிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, அமெரிக்காவிலிருந்து வருகிற கோதுமையை பெறுவதால், அமெரிக்காவுக்கு வால் பிடிக்கிறுர்கள் சர்வோதயக்காரர்கள் என்று சில பத்திரிகைக்காரர்கள் எழுதக் கூடும் அல்லவா ? ஆகவே, அந்த டொனேஷனை ஏற்றுக்கொள்ளாமல், மறுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது எப்போதிருந்தோ வருகிறது. இப்போது தான் அமெரிக்க அரசாங்கத்திற்கும், இந்திய அரசாங்கத்திற்கும் கருத்து வேறுபாடு இருக்கிறது. சர்வோதயாவுக்கும் அரசாங்கத்திற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, எல்லா வகைகளிலும் அமெரிக்கா தன்னுடைய உதவியை ரத்து செய்து இருப்பதாகத் தெரிகிறது. அதிலே இந்த உதவி அடங்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

டால்மியாபுரத்திலுள்ள அரசு சிமிட்டி தொழிற்சாலை

* 367 வினு—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

டால்மியாபுரத்தில் உள்ள தமிழ்நாடு அரசு சிமெண்ட் தொழிற்சாலையை மூடும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?